**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**அ.வ..எண்.130/17** **நாள்.28.10.2021**

2021 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ம் நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதா | தொழில் | |
| த. பெ./க.பெ. | மாணிக்கம் | சாதி | |
| கிராமம் | மேல்களவாய் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 55 |

**வா.சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1 -ம் சாட்சி ஆவேன். நான் **வா.சா.1** **ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வா.த.சா.1 – 25.04.1986 தேதியிட்ட துரைசாமி நயனார் , அய்யாதுரை பெருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

2.வா.த.சா.2- 05.07.2017 தேதியிட்ட அய்யாதுரை பெயரிலுள்ள பட்டா எண் 708 கணினி நகல்.

3.வா.த.சா.3- 12.07.2017 தேதியிட்ட வாதி எம்.கே.ராதா என்பவருக்கு பொய்யாதுரை கவுண்டர் எழுதி கொடுத்த 1வது அயிட்ட சொத்திற்கான பதிவு கிரைய பத்திரம்.

4.வா.த.சா4-26.07.2017 தேதியிட்ட வாதிக்கு தாவா 2 ,3 அயிட்டங்கள் சம்பந்தமாக அய்யாதுரை எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் அசல்.

5.வா.த.சா.5-05.10.2017 தேதியிட்ட வாதி பெயரிலுள்ள பட்டா 753 க்கான கணினி நகல்.

6.வா.த.சா.6- வாதி பெயரிலுள்ள மின் கட்டண அட்டை அசல்.

7.வா.த.சா.7- 10.11.2017 தேதியிட்ட வாதி பெயரிலுள்ள மின்கட்டண ரசீது அசல்.

8.வா.த.சா.8-01.02.2018 தேதியிட்ட வாதி பெயரிலுள்ள தீர்வை ரசீது அசல்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீ'ர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**